தீவிரவாத எதிர் நடவடிக்கை மூலோபாயத்தின் புதிய பரிமாணங்கள்

அநபாயன்
(ஒரு பேப்பருக்காக)

கிளர்ச்சித் தடுப்பு மூலோபாயமானது, கடந்த நூற்றாண்டின் ஆரம்பம் தொட்டு வளர்ந்து வருகின்ற அதிகளவான புலமைசார் வளர்ச்சியைக் கண்ட ஒரு துறையாக, இராணுவ புலனாய்வுப் பரப்பில் விளங்கி வருகின்றது.

அடிப்படையில் இரு நாடுகளுக்கு இடையிலான யுத்தம் போலல்லாது, ஒரு கிளர்ச்சி யுத்தமானது எப்போதும் ஒடுக்கப்பட்ட மக்கள் குழுமத்திலிருந்து அல்லது தேசிய இனக் குழுமத்திலிருந்து உரிமைக்கான ஓர் போராட்டமாக தொடுக்கப்படுவது என்ற யதார்த்தத்தின் அடிப்படையில், கிளர்ச்சி யுத்தங்களை எதிர் கொள்வதற்கான பல்வேறு வகையான மூலோபாய நடவடிக்கைகள் பல்வேறு இராணுவ அறிஞர்களால்/தளபதிகளால் வடிவமைக்கப்பட்டன.

இத்துறை சார்ந்த நூல்கள், ஆய்வுகள் பெருமளவில் அமெரிக்க இராணுவத்தால் வடிவமைக்கப்பட்டன. இவை பெருமளவில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் தென்கிழக்காசியாவில் பிலிப்பைன்ஸ் தீவுகள் மற்றும் மலேசிய இடது சாரிக் கிளர்ச்சி யுத்தங்களை எதிர் கொண்ட அநுபவத்தின் அடிப்படையில் அமெரிக்க இராணுவம் தனது கிளர்ச்சித்தடுப்பு மூலோபாயத்தை, தனது இராணுவப் பயிற்சிக் கற்கை நெறியில் சேர்த்துள்ளது.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உக்கிரமடைந்த வட அயர்லாந்து விடுதலைப் போரானது, தீவிரவாத எதிர் நடவடிக்கை மூலோபாயத்தில் இன்னொரு பரிமாணத்திற்கு வழிகோலியது எனலாம். அதாவது IRA இயக்கத்திற்கு எதிராக பிரிட்டிஷ் அரசாங்கம் துணை இராணுவக்குழுக்களை (Loyalist Para Military Groups) அறிமுகப்படுத்தியது.

இத் துணை இராணுவக் குழுக்கள் பல நூற்றுக்கணக்கான IRA இயக்க உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், குடும்ப உறுப்பினர்களின் கொலைகளுக்கும், காணாமற் போதலுக்கும் காரணமாய் இருந்தன என்பது இன்று பகிரங்கமான ஓர் விடயம்.

அத்துடன் புலனாய்வுத் துறையில் பிரிட்டிஷ் இராணுவம் மிக இலாவகமாக IRA இயக்கத்திற்குள் தனது உளவாளிகளை வெற்றிகரமாக ஊடுருவ வைத்ததுடன, தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் வட அயர்லாந்திற்கு வெளியே IRA இயக்கத்தின் தாக்குதல் திறனை முற்றாக இல்லாதொழித்ததில் பெரும் வெற்றியும் பெற்றது எனலாம்.

அதாவது IRA இயக்கத்தின் அச்சுறுத்தல் குறைவடைந்துள்ளது என்பதை வெளிக்காட்டும் வகையில், அப்போதைய பிரதமர்ஜோன் மேஜரிற்கு வழங்கப்பட்டு வந்த கொமாண்டோ பாதுகாப்பு உத்தியோகபூர்வமாக விலக்கப் பட்டது. பிரிட்டிஷ் இராணுவத்தின் IRA கிளர்ச்சித் தடுப்பு யுத்த அநுபவப் பகிர்வுகளை பெருமளவு புத்தகங்கள், புலமைசார் ஆய்வுப் பத்திரிகைகள் வெளிவந்திருந்தன.

இவற்றின் முக்கியத்துவம் என்னவென்றால் சமீப காலத்தில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட ஓர் கிளர்ச்சி யுத்தம் பற்றிய ஓர் 'ஆக்கிரமிப்பு இராணுவத்தின்'வெற்றிக்கதை. இதன்காரணமாக பல்வேறு நாட்டு இராணுவத் திட்டவியலாளர்களும், பிரிட்டிஷ் இராணுவத்தின் அநுபவப்பகிர்வை தங்களது இராணுவப் பயிற்சி நெறியில் இணைத்து போதித்தனர் எனலாம்.

புதிய பரிமாணம்

இருபத்தோராம் நூற்றாண்டில் கிளர்ச்சித் தடுப்பு யுத்தமும், அமெரிக்கா தலைமையிலான மேற்குநாடுகளின் பயங்கரவாதத்திற்கு எதிரான போரும் ஒன்றாகக் குவியப் பட்டுள்ளது காரணமாக புதிய சவால்களை மேற்கு நாட்டு இராணுவங்கள் எதிர் கொண்டன.

ஏற்கனவே இருக்கின்ற மூலோபாயச் செல் நெறிகள் இஸ்லாமிய கிளர்ச்சி நடவடிக் கைகளிற்கு எதிராக பயன்படுத்த முடியாதவை யாகவும் மிகவும் பழைமை வாய்ந்தவை யாகவும் காணப்பட்டதனால் புதிய மூலோபாயம் பற்றிச் சிந்திக்க வேண்டிய தேவை ஏற்பட்டது எனலாம்.

அமெரிக்காவிற்கு ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் யுத்தங்கள் காரணமாக ஏற்பட்ட கசப்பான படிப்பினைகளைக் கருத்தில் கொண்டு, அமெரிக்க இராணுவத்தின் Training & Doctrine Command (TRADOC) ஆனது புதியதோர் கருத்தியற் செயற்பாட்டு மூலோபாயத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. Human Terrain System என்பது, களத்தில் உள்ள தளபதிகளின் உள்ளூர்ச் சனத்திரளின் கலாச்சாரம் மற்றும் நம்பிக்கைகள், பாரம்பரியங்கள் தொடர்பான தெளிவின்மையைப் போக்கி, அவர்களின் திட்டமிடல் மற்றும் போர் மூலோபாயச் செயற்பாட்டிற்கு உதவும் ஓர் துறையாகும்.

தற்போது ஆப்கானிஸ்தானில் பரீட் சார்த்தமாக நடைமுறைப படுத்தப்பட்டு வரும் இத்திட்டமானது, அமெரிக்க இராணுவத்திற்குள்ள Cultural Knowledge தொடர்பான தெளிவின்மையை நீக்குவதில் பெரிதும் உதவி வருகின்றது.

Human Terrain System ஆனது இராணுவம், சமூக விஞ்ஞானிகள், மொழியியலாளர்கள், பிராந்தியம் தொடர்பான தெளிவான அறிவு கொண்ட புலமையாளர்கள் என ஒரு பல்துறை சார்ந்த குழுவாகும். இக்குழுவானது ஒவ்வொரு பிரிகேட் மட்டத்திலும் இராணுவத்தில் 'அழுத்தப்பட்டு' (Embedded) இயங்கும். இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் பெரும்பாலான சமூகவியலாளர்கள் மற்றும் மொழியியலாளர்கள் சிவிலியன்கள் ஆகும். இவர்கள் முறையாக இராணுவப் பயிற்சி பெற்ற வர்கள் அல்லர். அத்துடன் இராணுவத்திற்கு எதிரான தாக்குதல்களின் போது Human Terrain System (HTS) உறுப்பினர்களும் உயிரிழந்த சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

ஆனாலும் அவர்களின் பங்களிப்பானது அமெரிக்க இராணுவத்திற்கு பயனளிக்க ஆரம்பித்துள்ளது என்றே HTS தொடர்பான அமெரிக்க இராணுவத்தின் இணையத்தளம் குறிப்பிடுகின்றது. அதாவது HTS குழுவை முதன் முதலாக தம்முடன் இணைத்துக் கொண்ட பிரிகேட் ஆனது தமது தாக்குதல் நடவடிக்கைகையை (Lethal Operations) 70% ஆல் குறைக்க முடிந்ததாக குறிப்பிடப் பட்டுள்ளது.

சிறிலங்கா அரசின் கிளர்ச்சித் தடுப்பு மூலோபாயம்

சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறை யானது தொண்ணூறுகளின் நடுப்பகுதியில் குறிப்பாக யாழ்குடாநாட்டை ஆக்கிரமித்த பின்னரேயே, கிளர்ச்சித் தடுப்பு மூலோபாயம் தொடர்பாக அதிக அக்கறை செலுத்தியது எனலாம்.

அத்துடன் அதற்கான அரசியல் புறச் சூழ்நிலையும் சந்திரிகா குமாரதுங்காவின் அரசினால் உருவாக்கப்பட்டமையும் ஒரு காரணமாகும்.

ஏறத்தாழ பத்து வருடங்களிற்குப் பின்னர் சிங்கள இராணுவம் யாழ் குடாநாட்டின் மீதான தனது மேலாதிக்கத்தை மீள நிலை நாட்டிய பின்னர், அதனை எவ்வாறு தக்க வைத்துக் கொள்ளலாம் என்ற மூலோபாயச் சிந்தனையில், யாழ்குடாநாட்டு மக்களின் 'மனங்களை வெல்வதற்கான' மூலோபாயச் செல்நெறியே மையப்புள்ளியாக விளங்கியது எனலாம்.

அவ்வேளையில் சந்திரிகாவின் 'சமாதானத்திற்கான யுத்தம்' மற்றும் 'சமாதானப்பொதி' போன்ற கருத்தியல்கள், தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமையிலான மிதவாத அரசியல் முகாமில் அதிக செல்வாக்குச் செலுத்திய நேரம், கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் ஒருமுறை அவுஸ்திரேலிய தூதுக்குழு ஒன் றைச் சந்தித்த போது, 'காத்திரமான தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்தால் மாத்திரமே விடுதலைப்புலிகளை ஓரங்கட்டலாம்' என்று கூறிய காலம். அதாவது இவ்வாறான புறச் சூழ்நிலையில் விடுதலைப் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்வதற்கான எந்த ஒரு முயற்சியும் பெரு நம்பிக்கையுடன் செய்யக் கூடிய ஒரு காலம் அது.

கப்டன் முனாசும், லரி விஜேரட்ணவும்

சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத் துறை யானது தனது கிளர்ச்சித் தடுப்பு மூலோ பாயத்தின் கருத்தியலுக்கு வடிவம் கொடுத்த போது, அது இரண்டு வெவ்வேறான செயற் பாட்டு வடிவத்தை எடுத்தது எனலாம்.

முதலாவதாகத் தோன்றிய வடிவத்திற்கு உதாரணமாக வெளிப்பட்டு இருப்பவர், கப்டன் முனாஸ். பெயரை வைத்துக் கொண்டு இவரை இஸ்லாமியர் என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். அடிப்படையில் ஓர் சிங்கள இராணுவ வீரர். சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத் துறையில் தொண்ணூறுகளின் ஆரம்பம் முதல் கிழக்கு மாகாணத்தில் வேலை செய்தவர்.

கப்டன் முனாசே அக்காலப்பகுதியில் நடை பெற்ற கொலைகள், காணாமற் போதல்கள் போன்றவற்றின் மூலகர்த்தாவும் ஆவார். முனாஸ் என்ற பெயரைக் கேள்விப்பட்ட தமிழர்கள் ஒரு இஸ்லாமியர்தான் இவ்வாறான அட்டூழியங்களை மேற்கொண்டு வருகின்றார் என்ற முடிவுக்கு வருவார்கள். இது மேலும் தமிழ் - முஸ்லீம் உறவை பாதிப்படையச் செய்தது எனலாம்,

கப்டன் முனாஸ் தான் புளொட் மோகனை இராணுவப் புலனாய்வுத் துறைக்குள் உள்வாங்கியவர். அத்துடன் ராசிக் குழுவிற்கு மட்டக்களப்பில் இருந்து செயற்படுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டவரும் இவரே. 1995ம் ஆண்டு தென் இலங்கையில் வாவிகள் ஆறுகளில் தமிழ் இளைஞர்களின் உடல்கள் மிதந்த சம்பவத்தின் பின்னால் சிறப்பு அதிரடிப்படையினர் இயங்கி இருந்தாலும் அதற்கான வடிவம் கொடுத்தவர் கப்டன் முனாஸ்.

சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத் துறையின் தமிழர்களின் 'மனங்களை வெல்வ தற்கான' போரின் வடிவமாக வெளிப்பட்டு நிற்பவர் தான் மேஜர் ஜெனரல் லரி விஜயரட்ண. இவர் சூரியக் கதிர் நடவடிக்கையின் பின்னர் வடமராட்சிப் பிரதேசத்திற்கான கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டவர்.

லரி விஜயரட்ண அங்குள்ள தமிழ் மக்களின் நாளாந்த வாழ்வில் அதிகம் பேசப்பட்ட, இடம் பிடித்த ஒரு மனிதர் என்றால் அது மிகைப்படுத்தப்பட்டது என்று ஒருவரும் கூற மாட்டார்கள். தனிப்பட்ட ரீதியில் அங்குள்ள பல குடும்பங்களின் வீடுகளுக்கு மாலை வேளையில் தேநீர் அருந்தப்போகும் அளவிற்கு தனது ஆற்றலை வெளிப்படுத்தியவர்.

அதாவது லரி விஜயரட்ண மிகச் சிறந்த Communicator ஆகவும் மனிதர்களின் உளவியல் பலம் மற்றும் பலவீனம் பற்றி அறிந்து சந்தர்ப்பத்திற்கேற்ப மிகவும் பண்பாகவும், நாசூக்காகவும் பேசும் வல்லமை படைத்தவர்.

(தொடர்ச்சி 15 ம் பக்கத்தில்)

ஸ்ரீ கருமாரி அம்மன் ஜோதிட நிலையம்

SRI KARUMARI AMMAN JOTHIDA NILAYAM

பண்டிதர் அர்ஜுன் ரெட்டி சாஸ்திரி

EELAM ENTERPRISES

164B, Mitcham Road, London SW17 9NJ

(Near Selvarajah Gold House)

Contact: PANDIT A ARJUN REDDY SASTRY

Mob.: 07529 723 111, 07529 723 118

Seven days a Week from 10.00 am. Till 10.00 pm.

மெய்யன்பர்களே,

30 வருட அனுபவம் நிறைந்த பண்டிதர், கருமாரி அருள் கொண்டு கைரேகை மூலம், முகநாடிமூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள் – கணவன் மனைவி ஒற்றுமை, குழந்தைப் பாக்கியம், கைரேகை, திருமண யோகம், தொழில், வியாதிகள், வியாபாரம், லட்சுமீகர விடயம், காதல், கல்யாணம், கோட்டு வழக்குகள், வாகனப் பொருத்தம், வீட்டு வாஸ்த்த, கண் திருஷ்டி ஆகிய அனைத்தும். தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும். முந்திர தந்திரம், செய்வினைகள் போன்றவை ஹரி ஓம் மந்திரத்தினால் பரிகாரம் செய்யப்படும்.

Pandit A Arjun Reddy Sastry



Through face – palm reading "Horescope" Date of birth, Numerology: So, come and consult him once. He will solve and guide all your problems like health, business, marriage, education, carrier/job, abroad, promotion, land. Court, birth of children, visa and family problems etc. He has done protection things for house, house vasthu, shop and personal matters etc. English, Tamil, and Hindi are the Languages of contact.

Confidentiality will be maintained for your secret matters.